**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.147/2019**

| | |
|---|---|
| **NAME** | : திருமால் |
| **FATHER NAME** | : |
| **VILLAGE** | : |
| **TALUK** | : |
| **CALLING** | : |
| **RELIGION** | : |
| **AGE** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 06.03.2023.**

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை எதற்காக போட்டுள்ளேன் என்றால் சொத்தை விற்பனை செய்துள்ளார்கள். அது வேண்டாம் என்பதற்காக இந்த வழக்கு போட்டுள்ளேன். நான் தென்னை உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தின் சார்பாக வழக்கு போட்டள்ளேன். என்னை 2013ல் தலைவராக தேர்ந்தெடுத்துள்ளார்கள். அதற்கு தீர்மானக்குழு நடைபெற்றது. எங்கள் சங்கம் சொசைட்டி விதியின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு என்று பைலாஸ், ஆர்டிகல் ஆப் அசோசியேசன், மெமொரேண்டம் எல்லாம் உண்டு. அந்த விதிமுறைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சங்கம் 1995ல் உருவாக்கப்பட்டது. 199லிருந்து உருவாக்கப்பட்டதற்கான மினிட்ஸ் புக் நான் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் இருந்ததற்கான மினிட்ஸ் புக் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மினிட்ஸ் புக் வா.த.சா.ஆ.5 என்றால் சரி. 01.01.2014ல் என்னை தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். பக்கம் 22ல் உள்ளது. மறுபடியும் மாற்றி பக்கம் 14ல் தலைவராக தேர்ந்தெடுத்ததற்கான விவரம் உள்ளதாக கூறினார். அதில் என்னை தேர்ந்தெடுக்கப்பட்டதாக காணப்படுகிறதா என்றால் புதிய தலைவர் என காணப்படுகிறது. 15.03.2013ல் பக்கம் 3ல் காணப்படுகிறது. அதில் 15.03.2012 என காணப்படுகிறது என்றால் தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. 2013தான் சரியான தேதி. என்னுடைய பைலா பிரகாரம் அசோசியேஷினில் மொத்தம் 100 பேர் இருக்கிறார்கள். எங்களுடைய பைலாப்படி 2ல் 3 பங்கு மெம்பர்கள் தீர்மானம் போட்டுதான் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால் ஆமாம். போட்டுதான் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அன்றைய தினம் 19பேர் தான்

கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம் ஆனால் வந்தவர்கள் கையெழுத்து போட்டுள்ளார்கள். 100 பேர் இருக்கிற இடத்தில் 19 பேர் மட்டும் கையெழுத்து போட்டால் அந்த தீர்மானம் செல்லாது என்றால் தவறு. நாங்கள் யார் தலைவர் செயலாளர் என்பது குறித்த விவரத்தை சொசைட்டியில் கொடுத்துள்ளோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டால் 2 வருட காலம் பதவிக் காலம். 2015 லும் நான்தான் தலைவர். 2015 ற்கான தீர்மான நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, சங்கத்தில் உள்ளது. 2019 ல் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது நான்தான் தலைவர் என்பதற்கான தீர்மான புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் சங்கத்தில் உள்ளது. இந்த மினிட்ஸ் புக்கில் சரிபார்க்கப்பட்டதற்கான சீல் இல்லை என்றால் சரி. சீல் போட்ட நோட் எங்களிடம் உள்ளது. அடுத்த வாய்தாவிற்கு கொண்டுவருகிறேன். இன்றுவரை ரெனிவலில்தான் உள்ளது. என்னுடைய வழக்குரை திருப்பப்பட்டபோது என்னுடைய வழக்கறிஞர் 2018 க்குப் பிறகு ரெனிவல் ஆகவில்லை என மேற்குறிப்பு செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொருளாளருக்குத்தான் அதுபற்றி தெரியும். ஒரிஜினல் சர்டிபிகேட் ஆப் ரெஜிஸ்ட்ரேஷன் எங்களிடம் உள்ளது. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.